# IMPACT OF MICROFINANCE ON POVERTY ALLEVIATION: SPECIAL REFERENCE TO J/111 GRAMMA NILADHARI DIVISION

**Sakitha Piratheesan**
*Faculty of Graduate Studies, University of Jaffna*
*tsakitha@gmail.com*

## ABSTRACT

Microfinance program extends small loans to very poor people for self-employment projects, that to care for themselves and for their families. Microfinance can thus play an effective role in extending the reach of credit in rural areas, Microfinance facilities enable an entrepreneur to build a business or expand existing business and create a better change in their lives. Microfinance Institutions (MFIs) give the opportunity for the people who are living under the poverty lines by granting loan for investment purposes and somehow by providing their management expertise. The main objective of this study is to identity the how the microfinance activities effect on the people living standard. 168 Microfinance beneficiaries randomly selected in J/111 GS division. Data were analyzed across different statistical tests through SPSS Software. The finding of this study shows that microfinance increases saving and consumption activities of beneficiaries. The results of regression analysis shows coefficients of loan amount is 0.562 with the p value of 0.001. It indicates that loan amount has statistically positive impact on alleviating poverty among micro finance loan holders in research area. According to the correlation analysis, it shows strong positive correlation between microfinance and saving and consumption activities with the coefficients of 0.73 ($p = 0.000$). Further, The $R^2$ value of the regression model is 0.59 which means that approximately 59% saving and consumption activities are implied by the microfinance. Thus, this study concluded that microfinance programme is a better tool for poverty alleviation strategy.

**Keywords**: - Microfinance, Poverty Alleviation, Income and Saving, Galle District

### ஆய்வின் அறிமுகம்

நுண்நிதிகள் பொருளாதாரத்தில் முக்கிய மூலக்கூறுகளாக அமைந்து காணப்படுகின்றது. சிறிய அளவான அதாவது நுண்கடன்களை மிகவும் வறிய மக்களுக்கு வழங்கி அவர்களால் முன் னெடுக்கப்படுகின்ற சுயதொழில் திட்டங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது, வருமானத்தை அதிகரிக்கச் செய்து வாழ்வாதார நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத் துகின்றது. வணிக நடவடிக்கைகளின் விருத்தியினூடாக பொருளாதார ரீதியான முன்னேற்றத் தினையும் ஏற்படுத்துகின்றது. நுண்நிதியை வழங்கும் நிறுவனங்களானவை வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களுக்கான மூலதன வசதிகளை உருவாக்கி தொழில் விருத்திக்கான முகாமைத்துவத்தினையும் ஏற்படுத்துகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் நுண்நிதிச்சேவைகளானவை பரந்துபட்ட பரப்பினை உள்ளடக்கியதுடன் தனியார், அரச துறைகளினால் வழங்கப்படுவதாகவும் உள்ளது.

கடன்களைப் பொறுத்த வரையில் கிராமிய ரீதியான வறுமையை தணிப்பதிலும், கிராமிய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. (Pit and khandker – 1998) நுண்நிதியினூடாக பல்வேறுபட்ட பரந்துபட்ட நிதிச் சேவைகளை அதாவது வைப்புக்கள், கடன்களை பெறக்கூடியதாக உள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களிலே அண்மைக்காலங்களிலே மேற்கொண்ட ஆய்வில் பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் யாதெனில் நுண்நிதியானது தொழில்களின் வாயிலாக சமூக பொருளாதார நிலைமைகளில் முன்னேற் றத்தினை ஏற்படுத்தி வறுமையை தணிக்கின்றது. (Husain 2008, Khandker and pitt – 2005) நுண் நிதிகள் தொடர்பாக சாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும், நுண்நிதிகளானவை வறிய மக்களை மேலும் வறியவர்களாக மாற்றுகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

உலக வங்கியின் மானிட அபிவிருத்தி பிரிவானது அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளிலே மேற்கொண்ட ஆய்வில் பாக்கிஸ்தானில் வறுமை மட்டத்தினை குறைப்பதில் நுண்நிதியின் பங்கானது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்ற முடிவானது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்து நுண்நிதித் துறையானது பாரிய அளவான வளர்ச்சியை கடந்த காலங்களிலே கண்டுள்ளது. இலங்கையில் உள்ள நிதி நிறுவனங்களும் நுண்நிதிச்சேவை சார்ந்து தமது சேவைகளை பாரிய அளவில் விஸ்தரித்துள்ளதுடன் நிறுவனங்களுக்கிடையே போட்டி நிலைமையும் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ் பிரதேச செலக பிரிவில் உள்ள பகுதியில் வறுமை நிலையினை அவதானிக்க கூடியதாக இருந்தாலும், இவ் வறுமைநிலையினை தணிப்பதில் நுண்நிதிகள் எந்தளவு தூரம் பங்களிப்புச் செய்கின்றன என்பதனை ஆராய்வதாக இவ் ஆய்வானது அமைகின்றது. வறுமை எனப்படுவது மனிதன் ஒருவன் தனது நாளாந்த நுகர்வுத் தேவைகளை கூட நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையேயாகும். இவ் வறுமையானது முழுவறுமை, சார்பு வறுமை என்ற வகையில் வகைப்படுத்தப்படும் இதில் முழுவறுமை என்பது

வறுமை ஏற்படும் பட்சத்தில் பல்வேறுபட்ட சமூக பொருளாதார இடர்களை மனிதன் எதிர் நோக்கவேண்டி உள்ளது. அதாவது சேமிப்பு, முதலீடு மட்டங்கள் குறைவடைவதுடன் மக்களின் நாளாந்த வாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிப்பினை எதிர்நோக்குகின்றது. வறுமையை உலக ஐக்கிய நாடுகள் நிறுவனமானது வறுமையைத் தணிப்பதில் நுண்கடன்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதனை சுட்டிக்காட்டியிருந்தது. பொதுவாக, நுண்நிதி சேவைகள் சேமிப்பு, கடன்கள், நுண்காப்புறுதி, பணப்பரிமாற்றம் போன்றவற்றை முக்கிய இலக்குகளாக கொண்டுள்ளதுடன் இவற்றினூடாக வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல், வருமானத்தினை அதிகரித்தல், சொத்துக்களை அதிகரித்தல் போன்றவற்றினை நோக்காகக் கொண்டுள்ளன. இலங்கையின் கடந்த கால அனுபவங்களின் படி நோக்கின் இலங்கையில் நுண் இமூலாதாரமாகக் கொண்டு உருவமைக்கப்பட்டதாகும். இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைப்படி கடந்தகாலத்தில் வெளிநாட்டுக்கடன்கள் பெருமளவில் நுண்நிதி நடவடிக்கையில் ஈடுபடுத் தப்பட்டதாகும். இதன் விளைவு யாதெனில் வறியவர்களிடையே வறுமை நிலை குறைக்கப் பட்டதுடன், வாழ்கைத்தரமானது அதிகரித்தநிலை காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

நுண்நிதிச் நியதிச்சட்டம் ஆனது 2015ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும். அந்த வகையால் யாழ் மாவட்ட பிரதேசசெயலக பிரிவில் உள்ள J/111 கிராமசேவகர் பிரிவில் நுண்நிதியானது வறுமைத்தணிப்பில் எவ்வகையான பங்களிப்பை வழங்குகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக உள்ளது. யநல்லூர் பிரதேசசெயலக பிரிவில் உள்ள J/111 கிராமசேவகர் பகுதிகளில் நுண்நிதி கிடைக்கப்பெறும் மூலங்களை கண்டறிவதுடன், இந்நுண்நிதியானது மக்களிடையே காணப்படுகின்ற வறுமையை குறைப்பதில் எவ்வகையான வழிகளில் பங்களிப்புச் செய்கின்றது என்பதனை ஆராய்வதே ஆய்வுப் பிரச்சனையாக உள்ளது.

## ஆய்வின் நோக்கம்

**பிரதான நோக்கம்**

1. நுண்நிதியானது மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் உயர்வினை அறிதல்.
2. நுண்நிதியினை மக்கள் பெறும் மூலங்களினை அடையாளங்காணுதல்.

**சிறப்பான நோக்கங்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் வறுமைக்கான காரணங்களை கண்டறிதல்

வறுமையினால் ஏற்படுகின்ற சமூக பொருளாதார தாக்கங்களை இணங்காணுதல்

**ஆய்வின் கருதுகோள்**

$H_1$:- நுண்நிதியின் கடன்தொகையானது வறுமைத் தணிப்பில் தாக்கம் செலுத்துகின்றது,

$H_2$:-நுண்நிதியானது சேமிப்பு மற்றும் நுகர்வு நடவடிக்கைகளினை அதிகரிக்கின்றது.
என்பன உள்ளன.

**கடந்தகால ஆய்வுகள் பற்றிய மீள் பார்வை**

நுண்நிதியானது சமூக பொருளாதார விடயங்களில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் நுண்நிதியானது பாரியளவான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் பெண்களினை வலுப்படுத்தல், குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகள், சுகாதார வசதிகள் மற்றும் ஏனைய சமூக பொருளாதார காரணிகளிலும் நேரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற முடிவினை சுட்டிக்காட்டியிருக்கின்றார். (Chandrasekar and Prakash – 2010)

ஆசிய நாடுகளில் மேற்கொண்ட ஆய்விலே நுண்நிதிவசதிகள் ஆனவை வறிய குடும்பங்களின் வறிய குடும்பங்களின் கல்வி வசதி, வருமானம் போன்றவற்றில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்ற முடிவினை பெற்றுள்ளார். (Mayer – 2002)

பங்களாதேசில் மேற்கொண்ட ஆய்வில், அங்குள்ள நுண்நிதி வழங்கும் நிறுவனங்களானவை வறியவர்களுக்கு தங்கு தடையின்றி கடன்களை வழங்குகின்றது எனவும் நுண்நிதியினைப் பெறுவோர் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன் குழந்தைகளின் திருமணம்; வீடு புனரமைத்தல் போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர் என்றும் இதேபோல பெறுகின்ற கடன்களை திருப்பிச் செலுத்துவதிலும் எவ்வித தடைகளும் காணப்படுவதில்லை. (Rahman 2010)

நுண்நிதியானது வருமான உருவாக்கம், மற்றும் வறுமைத்தணிப்பு நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை பிற்செலவு மற்றும் இணைபுக்குணகங்கள் வாயிலாக நிருபித்துள்ளார். இவரது ஆய்வின்படி. வருமானம் மற்றும் நுகர்வுக்கோலம் போன்றவற்றில் நுண் நிதியானது நேரான தாக்கத்த ஏற்படுத்துகின்றது என்றும் வறுமை

நிலையினை சமூக மட்டத்தில் முன்பு உள்ள நிலையினை விட குறைந்த மட்டத்துக்கும் செல்கின்றது. (Abbasf 2005) இதே கருத்தினை 99 நாடுகளை மையப்படுத்தி பிற்செலவு மாதிரியினூடாக நுண்நிதியானது வறுமைத்தணிப்பு நடவடிக்கையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(Imai & Gaitha.2010)

பொலநறுவை மாவட்டத்தினை மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வினிலே கடன்தொகை, திருப்பிச்செலுத்தும் ஆளுமை, கடனை பெறுவதற்கான வாய்ப்பு, வட்டிவீதம் போன்றவற்றை சாராமாறிகளாகவும், வறுமைத்தணிவினை சார்மாறியாகவும் கொண்டு ஆய்வினை மேற் கொண்டுள்ளார். முடிவின்படி பொலநறுவை மாவட்டத்தில் நுண்நிதியானது மக்களின் வாழ் வாதாரத்தினை மேலுயர்த்துவதுடன் வறுமையையும் குறைவடையச் செய்கின்றது. (Kalvarachchi , Jahter – 2014)

திருகோணமலை மாவட்டத்தினை மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வில், நுண்நிதியானது, மக்களின் வருமானம் மற்றும் சேமிப்புமட்டம் போன்றவற்றில் நேரான இணைபை கொண்டுள்ளது எனவும் 39.5% ஆனோர், நுண்நிதியானது வருமான மட்டத்தினை அதிகரிக்கின்றது என்றும் 14.2% ஆனோர் தனியார் மட்டத்தில் சேமிப்பினை நுண்நிதியானது அதிகரிக்கின்றது என்பதோடு வாழ்க்கைத்தர மட்டத்தினையும் அதிகரிக்கின்றது என்ற முடிவினைப் பெற்றுள்ளார். (Thilepan &Thiruchelvam – 2011)

நைஜீரியாவில் மேற்கொண்ட ஆய்வில் நுண்நிதியானது வீட்டுத்துறையின் வருமானம் மீது நேரான தாக்கத்தை கொண்டுள்ளது என்றும் 78% ஆன பயனாளிகள் நுண்நிதிக்கடன்கள் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நடவடிக்கைகளில் முன்னேற்றத்தினை ஏற்படுத்த உதவுகின்றது என்றும், 67% ஆனேற் தமது வர்த்தக நடவடிக்கைகளினை விரிவாக்கம் செய்ய நுண்நிதிக்கடன்கள் உதவு கின்றது என்றும், 24% ஆனோர் நுண்நிதிக்கடன் தமது வர்த்தக புதிய தொழில்நுட்பம் நோக்கிய முதலீடுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குகின்றது என்றும் 9% தமது உற்பத்திகளை ஏற்றுமதி நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கான கடன்வசதிகளை நுண்நிதிக் கடன்கள் வழங்குகின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (Imoisi 2014)

நுண்நிதியானது வருமானம் மற்றும் செலவில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நுண்நிதி நிகழ்ச்சித்திட்டமானது வருமானம் மற்றும் செலவில் நேரான தாக்கத்தை ஏற்பத்துகின்றது இதேபோல இஸ்லாமிய நுண்நிதியானது சமூக பொருளாதார நிலைகளில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வினிலே நேரான தாக்கத்தை ஏற்படுத்தி வறுமையைக் குறைக்கின்றது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. (Addul Rahim & Aabul Rahman – 2010) (Haneet – 2000) இதேபோல பங்களாதேசில் மேற்கொண்ட ஆய்வில் இம் முடிவே பெறப்பட்டுள்ளது.

வறுமை ஏற்படும் பட்சத்தில் பல்வேறுபட்ட சமூக பொருளாதார இடர்களை மனிதன் எதிர் நோக்கவேண்டி உள்ளது. அதாவது சேமிப்பு, முதலீடு மட்டங்கள் குறைவடைவதுடன் மக்களின் நாளாந்த வாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிப்பினை எதிர்நோக்குகின்றது. வறுமையை குறைத்துக்கொள்ள / இழிவளவாக்கிக்கொள்ள நுண்நிதி நடவடிக்கைகள் சிறந்த தீர்வாக அமைகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரதேசமான யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் J/111 பகுதியானது ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பகுதியிலுள்ள நுண்கடன்களை பெற்றுக்கொள்ளும் பயனாளிகளிடையே 168 பேர் எழுமாறான முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பயனாளிகளிடம் இருந்து திரட்டிக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆனவை சமூக விஞ்ஞானத்துக்கான புள்ளி விபரவியல் பொறி – Spss) என்ற கணனி மென்பொதி மூலம் பகுப்பாய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## தரவுப்பகுப்பாய்வு

வினாக்கொத்துக்களின் வாயிலாக பெற்றுக்கொள்ளப்பட்டமுடிவுகளை நோக்கின், நுண்நிதி நடவடிக்கைகளின் வாயிலாக தமது சொத்து மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது என 158 பயனாளிகளும், நுண்நிதி நடவடிக்கைகள் வர்த்தக நடவடிக்கையில் விரிவாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என 132பயனாளிகளுமூ, நுண்நிதி செய்ற்பாடுகள் வாழ்க்கைத்தரத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது என 162 பயனாளிகளும், நுகர்வு மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கின்றது என 168 பயனாளிகளும் நுண்நிதி நடவடிக்கைகள் சமூக, பொருளாதார ரீதியான விடயங்களில் நேரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என 163பயனாளிகளும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில் பிள்ளைகளின் கல்வி வசதி, மற்றும் குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்ய உதவுகின்றது என 155 அளவினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். நுண்நிதியானது சுயதொழில் முயற்சியாளர்களிடம் தொழில் வளர்ச்சிக்கான முக்கிய மூலாதாரமாக உள்ளது என 168 பயனாளிகளும் பெண்தொழில் முயற்சியாளர்களிடையே வலுப்படுத்தலை (Empoament) அதிகரிக்கின்றது என 168 பயனாளிகளும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எனவே வினாக்கொத்துக்களின் வாயிலாக பயனாளிகளிடம் இருந்து திரட்டிக் கொள்ளப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு ஊடாக நோக்குகின்ற போது, நுண்நிதி நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி வறுமை நிலையினை தணிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.ஆய்வு தொடர்பான சார்மாறியாக நுண்நிதி நடவடிக்கைகளும் சாராமாறிகளாக நுண்நிதிமூலமான கடன் தொகை,

மீளச்செலுத்துவதற்கான ஆற்றல;, மாதாந்த வருமானம;, மாதாந்த சேமிப்பு,கடன் பெறுவதற்கான வசதிகள், தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் என்பனவும் உள்ளன. வினாக்கொத்துக்களின் வாயிலாக திரட்டிக் கொள்ள தரவுகளின் இணைபுக்குணங்களை நோக்கின் எடுத்துக்கொள்ளப்பட்ட சாராமாறிகளுக்கும் சார் மாறியான நுண்நிதி நடவடிக்கைகளுக்கும் இடையிலான இணைபு வீதங்களை நோக்கின்

அட்டவணை 3.1

| மாறிகள் | இணைபு |
|---|---|
| கடன்தொகை | 0.87 |
| மீளச்செலுத்துவதற்கான ஆற்றல் | 0.69 |
| மாதாந்த வருமானம் | 0.75 |
| மாதாந்த சேமிப்பு | 0.79 |
| கடன் பெறுவதற்கான வசதிகள் | 0.72 |
| தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் | 0.68 |

(மூலம்:- களஆய்வு- 2019)

அட்டவணையின் படி நோக்ககின்ற போது ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து சாராமாறிகளுமே சார்மாறியான வறுமைத்திணிப்புடன் நேரான இணைபு வீதத்தை கொண்டுள் ளதுடன் வறுமைத்திணிப்பில் இம் மாறிகள் கூடியளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இங்கு கடன் தொகை மற்றும் மாதாந்த சேமிப்பு நடவடிக்கைகள் என்பன நுண்நிதி நடவடிக்கையுடன்கூடிய இணைபு வீதத்தை கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு கருதுகோள்களாக முன்வைக்கப்பட்ட நுண்நிதி நடவடிக் கைகள் மூலமான கடன் தொகை வறுமைத்தணிப்பில் செல்வாக்கு செலுத்துகின்றது. மற்றும் நுண்நிதி நடவடிக்கைகள் மக்களின் நுகர்வு மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கின்றது என்ற முடிவுக்கும் வரமுடிகின்றது. மேலும் ஆய்வின் கருதுகோளினை பிற்செலவு அணுகுமுறைகளினூடாக நோக்கின்

அட்டவணை 3.2

| மாறிகள் | பிற்செலவுக்குணகம் | T பெறுமதி | நிகழ்தகவுப்பெறுமதி |
|---|---|---|---|
| கடன்தொகை | 0.56 | 3.02 | 0.001 |
| மீளச்செலத்துவதற்கான ஆற்றல் | 0.21 | 4.18 | 0.003 |
| மாதாந்த வருமானம் | 0.42 | 3.98 | 0.008 |
| மாதாந்த சேமிப்பு | 0.39 | 6.32 | 0.197 |
| கடன் பெறுவதற்கான வசதி | 0.41 | 5.25 | 0.125 |
| தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் | 0.48 | 5.86 | 0.002 |

(மூலம்:- களஆய்வு – 2019)

*1% பொருண்மை மட்டம்.
துணிவுக்குணகம்= $R^2$ 0.8974
ஓழுங்கமைக்கப்பட்ட துணிவுக்குணகம் 0.8571
F பெறுமதி 121.45

அட்டவணை 4.2 இன் படி நோக்கின் கடன்தொகையின் பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதி 0.560 ஆகவும், நிகழ்தகவுப் பெறுமதி 0.001 ஆகவும் உள்ளது. இதன் கருத்து யாதெனில், கடன் தொகையானது வறுமைத்திணிப்பில் நேரான தாக்கத்தினை ஆய்வுப்பிரதேசத்தில் ஏற்படுத்து கின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. கருதுகோள் அடிப்படையில் நோக்கின் நுண்நிதியின் மூலமான கடன்தொகையானது 1% ஆல் அதிகரிக்கும் போது வறுமைத்தணிப்பில் நடவடிக் கையின் 56% ஆன தாக்கத்தை செலுத்தும் கடன்தொகை அதிகரிக்க வறியவர்களின் கொள்வனவு சக்தி அதிகரிக்கும். இதனால் சேமிப்பு மட்டம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் இது வறுமைத்தணிப்பில் செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே கடன் தொகையானது வறுமைத்தணிப்பில் செல்வாக்கு செலுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடியும். மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் அடிப்படையில் நோக்கின் இதன் பிற்செலவுக்கணக மதிப்பானின் பெறுமதி 0.213 ஆகும். இதன நிகழ்தவுப் பெறுமதி 0.003 ஆகும். இது வறுமைத் தணிப்பில் நேரான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரலாம். கடன்களை மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் 1% ஆல் அதிகரிக்கும் போது வறுமைத்தணிப்பு நடவடிக்கைகளிலும் 21% ஆன அதிகரிப்பினை ஏற்படுத்தி வறுமையைக்குறைக்கும். இதே போல மாதாந்த வருமானத்துக்கும் வறுமைத்தணிப்புக்கும் இடையிலான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதி 0.426 ஆகும். இதன் நிகழ்தகவுப் பெறுமதி 0.008 என்பதாகும். இதன்படி மாதாந்த வருமானது வறுமைத்திணிப்பில் நேரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இதன்படி மாதாந்த வருமானத்தில் ஏற்படும்

1% ஆன அதிகரிப்பு வறுமை தணிப்பு நடவடிக்கையில் 42% ஆன அதிகரிப்பினை ஆய்வுப்பிரதேசத்தில் ஏற்படுத்தும் மாதாந்த சேமிப்புக்கும் வறுமைத் தணிப்பு நடவடிக்கைக்கும் இடையிலான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதி 0.397 என்பதாகும். இதன் நிகழ்தகவுப் பெறுமதி 0.197 என்பதாகும். சேமிப்பு நடவடிக்கைகள் ஆய்வுப் பிரதேசத்தின் வறுமைத்தணிப்பு நடவடிக்கைகளில் நேரான தாக்கத்தை செலுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. சேமிப்பு நடவடிக்கைகள் 1% ஆல் அதிகரிக்கும் போது அது வறுமைத்திணப்பு நடவடிக்கையில் 39% ஆன தாக்கத்தை செலுத்தும் ஏனெனில் ஆய்வு பிரதேசத்தில் நுண்கடனைப் பெறுபவர்களின் சேமிப்பு மட்டம் அதிகரிக்கும் பட்சத்தில் அது முதலீட்டுக்கான தூண்டுகோலாக அமைவதுடன், முதலீடு நடவடிக்கையில் ஏற்படும் அதிகரிப் பானது வறுமையின் நச்சுச்சூழல் கூட்டத்தில் இருந்து மக்கள் விடுபடுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும்.

கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிக்கும் வறுமைத்தணிப்புக்கும் இடையிலான தொடர்பினைக்காட்டும் பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதி 0.296 என்பதாகும். இது நேரான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இங்கு கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வசதி 1% ஆல் அதிகரிக்கும் போது அது வறுமைத்தணிப்பு நடவடிக்கையில் 29% ஆன அதிகரிப்பு மட்டத்தை ஏற்படுத்தி வறுமை நிலையினைக் குறைக்கும். தொழில் விரிவாக்க நடவடிக்கை களுக்கும் வறுமைத் தணிப்பிக்கும் இடையிலான தொடர்பினை காட்டும் பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதி 0.483 என்பதாகும். இதன நிகழ்தகவுப் பெறுமதி 0.002 என்பதாகும். இதன்படி தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் வறுமைத்தணிப்பில் நேரான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. மேலும் தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் 1% ஆல் அதிக ரிக்கும் போது அது வறுமைத்தரிப்பு நடவடிக்கைகளினை 48%ஆல் அதிகரிக்கச் செய்கின்றது.

வறுமைத்தணிப்பில் நுண்நிதியின் தாக்கத்தினை அறிவதற்காக ஏடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரியில் உள்ள மாறிகள் அனைத்துமே நுண்நிதியுடன் நேர்க்கணிய தொடர்பை உடையதாக காணப்படுகின்றது.பெறப்பட்ட தரவுத் தொகுதியிலிருந்து பெறப்பட்ட பிற்செலவு மதிப்பான்கள் எவ்வளவு துாரத்திற்கு தரவுத்தொகுதியினை விளக்குகின்றது என்பதனை என்பதனை காட்டும் துணிவுக்குணகமானது ($R_2$)0.8974 ஆக உள்ளது. இதன்படி சாராமாறிகள் சார்மாறியின் 89% விலகலை விளக்குகின்றன. அதே வேளை ஏனைய 11% ஆன சார்மாறியின் விலகலை ஆய்வில் உள்ளடக்கப்படாத ஏனைய மாறிகள் விளக்குகின்றன.மேலும் F பெறுமதியானது 121.45 . அதன் நிகழ்தகவுப் பெறுமதியானது 0.001 ஆகும்.F பெறுமதியானது அட்டவணைப் பெறுமதியினை விட உயர்வாகும். எனவே இவ்ஆய்வில் F பெறுமதியானது புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத் தன்மையுடையதாகவே காணப்படுகின்றது. ஆகவே இவ்வாய்வின் பல்மாறி பிற்செலவு அணுகுமுறையின் படி முழு மொத்த மாதிரியும் புள்ளிவிபரரீதியாக பொருண்மைத்தன்மை உடையதாக காணப்படுகின்றது.

## கருதுகோள் நிருபீப்பு

| | கருதுகோள் | நிருப்புமுறை |
|---|---|---|
| H1 | நுண்நிதியின் மூலம் பெற்றக்கொள்ளும் கடன்தொகையானது வறுமைத்திப்பில் தாக்கத்தை செலுத்துகின்றது. | இணைபுக்குணகம் பிற்செலவு மாதிரி |
| H2 | நுண்நிதி நடவடிக்கைகள் சேமிப்பு மற்றும் நுகர்வு நடவடிக்கைகளினை அதிகரிக்கச் செய்கின்றது. | இணைபுக்குணகம் பிற்செலவு மாதிரி |

## முடிவுரையும் பரிந்துரைகளும்

நுண்நிதியானது வறுமைத்தரிப்பு நடவடிக்கையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து சாரா மாறிகளுமே (கடன்தொகை, மீளச்செலுத்துவதற்கான ஆற்றல், மாதாந்த வருமானம், மாதாந்த சேமிப்பு, கடன் பெறுவதற்கான வசதி) வறுமைத்தணிப்புடன் நேரான தாக்கத்தை கொண்டுள்ளதுடன், இணைபுக்குணக அடிப்படையில் நோக்கின் நேரான இணைபையும் கொண்டுள்ளது. எனவே நுண்நிதியானது ஆய்வுப் பிரதேசத்தில் வறுமைத்தணிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

மேலும் வறுமை என்பது தனியே ஓர் காரணியால் மட்டும் ஏற்படுவதில்லை. பல காரணிகள் வறுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. (சமூகக்காரணி, பொருளாதாரக்காரணி, அரசியல்காரணி, காலாசாரக்காரணி) எனவே நுண்நிதியானது வறுமைநிலையினால் ஏற்படும் சமூக, பொருளாதார பாதிப்புக்களான முதலீடு குறைவடைதல், சேமிப்புகுறைவடைதல், வறுமையின் நச்சுச்சூழல் வட்டத்தில் உள்ளோர் தொகை அதிகரித்தல் போன்ற பல்வேறுபட்ட பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கு உதவுகின்றது. நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள J/111 பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெற்றுக்கொண்ட முடிவுகளினையே முன்னைய காலங்களில் இலங்கை குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும், ஏனைய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும் முடிவுகளாக பெறப்பட்டுள்ளன. Harshani (2018), Aisha (2014), Waqar (2014), Kalurchchi & Jafter (2015). எனவே நுண்நிதி நடவடிக்கைகள் வறுமைத்தணிப்பு நடவடிக்கையில் செல்வாக்கு செலுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகின்றது என்ற முடிவினைப் பெறக்கூடியதாக உள்ளது மேலும் இவ் ஆய்வு குறித்த பரிந்துரைகளாக,

- நுண்நிதி நிறுவனங்கள் தமது செயற்பாடுகளினை விரிவாக்கம் அடையச்செய்தல்.
- மக்களிடம் நுண்நிதி தொடர்பான விழிப்பணர்வு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே நிறுவன ரீதியான விழிப்புணர்வுகளை வழங்குதல் வேண்டும்.
- அரசாங்கம் நுண்நிதி தொடர்பான கொள்கைகளை உருவாக்கி, மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.
- நுண்நிதி நிறுவனங்கள் கடன்களை மீளப்பெற்றுக்கொள்ளும் போதும் சிறப்பான நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். இது எதிர்காலத்தில் கடன் பெறுதல் மற்றும் திருப்பிச்செலுத்தல் போன்ற நடவடிக்கைகளினை சிறப்பாக கையாள வழிவகுக்கும்.
- குறைந்த வட்டி வீதத்துடன் கூடிய வகையில் கடன்களை வழங்குதல்.

## Reference

**Book**

Chandarsekar, prakash (2010) The Role of information communication technology in women empowerment and porverty eradication in kerela. APJRBM

**Conference**

Imail., Gaitha., Thapa. (2010) Microfinance and poverty (A Macro perspective), Research Institute for Economics and business Admini stration, kobe University (Discussior paper Series) 1-45

Imail., Gaitha., Thapa. (2010) Microfinance and poverty (A Macro perspective), Research Institute for Economics and business Admini stration, kobe University (Discussior paper Series) 1-45

Mayer (2002) “TrackRecord of Financial Institutions Assisting the poor in Asia. ADB InstituteResearch paper, no 49 , Manila.

Thilepan & Thiruchelvam (2011) Microfinance and livelihood development in poor coastal communties in Eastern Srilanka. Tropical Agriculture Research vol 22(3), 330-336

**Journal Articles**

Abbas, (2005) Microfinance Route to Tncome Genertion and poverty reduction : Evidance form District Faisalabad, Paskisthan Journal of Agricuiture l Social Sciences (2)

Mayou (2001) ‘Impact assesment of Micro Finance towards a Sustainable Learning process. Paper produced form the DFID Enterprise Development Impoact Assesment Information service (EDIAIS) website : www.enterprise Impact @org Lk.

Rahman (2010) Islamic Micro Finance Programme and its impact on rural porverty allievation, International Journal of Banking and finace 7(i) 11g – 138.

Kalurachchi & Jahfer (2014) ‘Microfinance and proverty allevtion in Srilanka. ‘ Journal Busniess and Management, 4th, 371 – 377.

Imsi & opara . (2014) Microfinance and its impact on poverty allevation A case study of some Microfinance Banks in Edo state. Nigeria American Journal of Humanities and social sciences 2(1), 27-41